# இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
**15 மே 2015 / 26 ரஜப் 1436**

**ஈமானும், மறுமைத் தீர்ப்பு நாளைப் பற்றி அறிவதும்**

الْحَمْدُ لله الْمَلك الْحَقِّ الْمُبِيْن الَّذي أَبَانَ لعبَاده منْ آيَاته مَا
به عبْرَةً للْمُعْتَبريْنَ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ
لَهُ إِلَهَ الأَوَّلِيْنَ وَالآخرِيْنَ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُه
وَرَسُوْلُه الْمَبْعُوثُ رَحْمَةً لِلْعَالَمِيْنَ. اَللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا
مُحَمَّدٍ وَعَلَى آله وَصَحْبِه وَسَلِّمْ تَسْلِيماً كَثِيْرًا . أَمَّا بَعْدُ فَيَا
عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கும் அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும், அவன் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" (பயபக்தி) வின் உணர்வை உச்சகட்டமாக வளர்த்துக் கொள்வோமாக! அவ்வாறு செய்தால், மறுமைத் தீர்ப்பு நாளின் போது நாம் உண்மையான

மகிழ்ச்சியை அடையலாம். அந்நாளில் நம்மில் ஒவ்வொருவரும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் கேள்வி கேட்கப்பட்டு, நமது செயல்களுக்கான அவனது தீர்ப்பை எதிர்பார்த்தவர்களாக இருப்போம்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

கடந்த வாரப் பிரசங்கத்தில், இறைநம்பிக்கையாளர்களாகிய நாம், நமது ஈமானை (இறைநம்பிக்கை) பலப்படுத்த வேண்டுமென்பதற்காகவும் அதன் மூலம் இம்மையிலும் மறுமையிலும் நாம் வெற்றியை அடைய வேண்டுமென்பதற்காகவும் நமது செயல்களைப் பற்றி சிந்திக்குமாறு "கதீப்" மூலம் நாம் கேட்டுக் கொள்ளப்பட்டோம். அதன் தொடர்ச்சியாக, இன்று, ஈமானின் ஆறு அம்சங்களில் ஒன்றைப் பற்றிச் சிந்திக்குமாறு உங்களுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன். அந்த அம்சம் எதிர்காலத்தில் நிச்சயம் நடை பெற இருக்கின்ற ஒரு நிகழ்ச்சியோடு தொடர்புடையதாகும். அந்நிகழ்ச்சி நடைபெறும் நாளில், அனைத்து உயிரினங்களும் அழிந்து விடும். படைத்தவனாகிய, எல்லாம் வல்ல அல்லாஹ் மட்டுமே நிரந்தரமாக இருப்பான். அந்த நிகழ்ச்சி மற்றும் அந்த நாளுக்குத் தான் "கியாமத்" (இறுதித் தீர்ப்பு நாள்) எனப்படும்.

ஜமாஅத்தார்களே!

கியாம நாளின் போது மனிதர்கள் அனைவரும் மீண்டும் எழுப்பப் படுவார்கள். அவர்கள் இவ்வுலகில் செய்த சிறிய, பெரிய செயல்கள் விஷயத்தில் அல்லாஹ்வினால் தீர்ப்பளிக்கப்படுவார்கள். ஒவ்வொரு தனிநபரும், ஆணும் பெண்ணும் அவர்களின் செயல்களுக்குத் தக்கவாறு

கூலிகள் வழங்கப்படுவார்கள். இக்கருத்தை, அல்லாஹ் திருக்குர்ஆனின் ”அல்-கியாமாஹ்” எனும் அத்தியாயத்தின் 1-10 வசனங்களில் பின்வருமாறு வர்ணிக்கின்றான்:

لَآ أُقۡسِمُ بِيَوۡمِ ٱلۡقِيَٰمَةِ ﴿١﴾ وَلَآ أُقۡسِمُ بِٱلنَّفۡسِ ٱللَّوَّامَةِ
﴿٢﴾ أَيَحۡسَبُ ٱلۡإِنسَٰنُ أَلَّن نَّجۡمَعَ عِظَامَهُۥ ﴿٣﴾ بَلَىٰ
قَٰدِرِينَ عَلَىٰٓ أَن نُّسَوِّيَ بَنَانَهُۥ ﴿٤﴾ بَلۡ يُرِيدُ ٱلۡإِنسَٰنُ
لِيَفۡجُرَ أَمَامَهُۥ ﴿٥﴾ يَسۡـَٔلُ أَيَّانَ يَوۡمُ ٱلۡقِيَٰمَةِ ﴿٦﴾ فَإِذَا
بَرِقَ ٱلۡبَصَرُ ﴿٧﴾ وَخَسَفَ ٱلۡقَمَرُ ﴿٨﴾ وَجُمِعَ ٱلشَّمۡسُ
وَٱلۡقَمَرُ ﴿٩﴾ يَقُولُ ٱلۡإِنسَٰنُ يَوۡمَئِذٍ أَيۡنَ ٱلۡمَفَرُّ ﴿١٠﴾

பொருள்: மறுமை நாளின் மீது நான் சத்தியம் செய்கின்றேன். (தனக்குத் தானே) நிந்தித்துக் கொள்ளும் ஆன்மாவின் மீது நான் சத்தியம் செய்கின்றேன். மனிதன் - மடிந்த பின் உக்கிக் போன) அவனுடைய எலும்புகளை (மீண்டும்) நாம் ஒன்று சேர்க்கவே மாட்டோம் என்று அவன் எண்ணிக் கொள்கிறானா?. ஆம்! அவனுடைய நுனி விரல்களையும் நாம் செவ்வையாக ((முன்புபோல்) ஆக்குவதின் மீதும் சக்தியுள்ளோராய் இருக்கின்றோம். எனினும், மனிதன் (மறுமை நாள் உண்டென்பதை மறுத்தவனாக) எதிர் காலத்திலும் தீமைகளைச் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்புகிறான். அந்த மறுமை நாள் எப்போது வரும்?

என்று அவன் கேட்கின்றான். பார்வை நிலைகுத்தி விடும் போது, மேலும், சந்திரன் ஒளி குன்றிப் போகும் போது, சந்திரனும் சூரியனும் ஒன்றாக இணைக்கப்படும் போது, அந்நாளில் இதே மனிதன் ”நான் எங்கே சென்று ஓடி ஒளிவது?” என்று கேட்பான்.

சுப்ஹானல்லாஹ்! (அல்லாஹ் மிகவும் பரிசுத்தமானவன்). கியாம நாளைப் பற்றிய திருக்குர்ஆனின் மேற்கண்ட வர்ணனைகள் நம்மைத் திகைப்படையச் செய்கின்றன. ஒவ்வொரு இறைநம்பிக்கையாளரின் உள்ளத்தில் பயத்தையும் வருத்தத்தையும் ஏற்படுத்துகின்றன. எனினும், மறுமைத் தீர்ப்பு நாளின் நிலைமையை நம்மால் முழுமையாக அறியவோ கற்பனை செய்யவோ முடியாது. காரணம், நமது அறிவாற்றல் எல்லைக்குட்பட்டதாகும். இவ்விஷயத்தில், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மூலமாகவும், அவனது தூதர்(ஸல்) அவர்கள் மூலமாகவும் எவை நமக்கு விவரிக்கப்பட்டுள்ளதோ அவற்றை மட்டுமே நம்மால் அறிய முடியும். உதாரணமாக, அந்நாளில், கலவரமான நிலையை எதிர்கொள்ளும் நிலையில், ஒரு தாய், தான் பெற்றெடுத்த பிள்ளையைக் கூட கவனத்தில் கொள்ள மாட்டாள் எனத் திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான். இவ்வுலகில் தன் பிள்ளைக்காக தன் உயிரையே அர்ப்பணிக்கும் தாயின் நிலை கூட அந்நாளில் இவ்வாறிருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

يَوْمَ تَرَوْنَهَا تَذْهَلُ كُلُّ مُرْضِعَةٍ عَمَّآ أَرْضَعَتْ وَتَضَعُ
كُلُّ ذَاتِ حَمْلٍ حَمْلَهَا وَتَرَى ٱلنَّاسَ سُكَٰرَىٰ وَمَا هُم
بِسُكَٰرَىٰ وَلَٰكِنَّ عَذَابَ ٱللَّهِ شَدِيدٌ ﴿٢﴾

பொருள்: அதனை (கியாம நாள்) நீங்கள் காணும் நாளில், பாலூட்டுகின்ற ஒவ்வொருத்தியும் அவள் பாலூட்டியதை (குழந்தையை) மறந்து விடுவாள். கர்ப்பமுடைய ஒவ்வொருத்தியும் தன் கர்ப்பத்தை இறக்கி விடுவாள் - (பிரசவித்து விடுவாள்). மனிதர்களை (பீதியின் மிகைப்பால்) மதிமயங்கியவர்களாக (இருக்க நபியே!) நீர் காண்பீர்; அவர்கள் மதுவினால் மதிமயங்கியவர்கள் அல்லர் - எனினும், அல்லாஹ்வுடைய வேதனை மிகக் கடுமையானதாக இருக்கும். (அல்-குர்ஆன்:அத்தியாயம்: 22 வசனம் :2)

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

ஒரு பக்கம், கியாம நாளைப் பற்றியும் அது சம்பந்தமான விஷயங்களைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டிய நாம், மறுபக்கம், கியாம நாள் எனப்படும் மறுமைத் தீர்ப்பு நாளுக்குப் பின்னணியிலுள்ள ”ஹிக்மத்” (தத்துவத்தையும்) மற்றும் பாடங்களையும் அறிவது அவசியமாகும். காரணம், நாம் ஏன் கியாம நாளில் நம்பிக்கை கொள்கிறோம் என்பதை ஆழமாக அறியவில்லையெனில், நம்மில் குழப்பம் ஏற்பட்டு விடும். நமது முயற்சிகளிலும், பயன்களை அடைவதிலும் நாம் தோல்வி கண்டு விடுவோம். ஒரு இறை நம்பிக்கையாளர் கியாம நாளை நன்றாக அறிந்து கொண்டால் அவர் ஒளிந்து கொள்ள முயற்சிக்க மாட்டார்; பயத்தால்

நடுங்க மாட்டார். அவர் தனது இம்மை வாழ்வின் நோக்கத்தையும் வாழ்க்கைத் திட்டங்களையும் கைவிட மாட்டார்.

கியாம நாளைப் பற்றியும், அந்நாளில் நடக்க இருக்கும் சம்பவங்களைப் பற்றியும் அல்லாஹ்வும் அவனது தூதர்(ஸல்) அவர்களும் மீண்டும் மீண்டும் கூறுகிறார்கள். அக்கூற்றுகள் மனிதகுலம் அழிந்து விடும் என்பதை நினைவூட்டுவதற்காக மட்டுமல்ல, மனிதர்கள் இவ்வுலகில் தமது வாழ்வை எப்படித் தொடர வேண்டும் என்பதையும் அவை சுட்டிக் காட்டுகின்றன.

எனவே தான், கியாம நாள் எப்போது ஏற்படும் என ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது, பல கேள்விகள் மூலம் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் அதற்குப் பதிலளித்தார்கள். அக்கேள்விகளில் ஒன்று "அதற்காக உன்னை நீ எவ்வாறு தயார் செய்துள்ளாய்?" என ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அப்போது கேள்வி கேட்டவர் : "நான் அதற்காக அதிகமான தொழுகைகளைத் தொழுதோ, நோன்புகளை நோற்றோ, அதிக தர்மங்களைக் கொடுத்தோ என்னை நான் தயார் படுத்திக் கொள்ளவில்லை. எனினும், நான் அல்லாஹ்வையும் அவனது தூதர்(ஸல்) அவர்களையும் நேசிக்கிறேன்" என்று கூறினார். அப்போது " நீ எவர்களை நேசித்தாயோ அவர்களுடன் மறுமையில் எழுப்பப்படுவாய்" என்று ரசூலுல்லாஹி(ஸல்) பதில் கூறினார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

ஜமாஅத்தார்களே! மேற்கண்ட ஹதீதில், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் கியாம நாள் விஷயத்தில் நாம் அறிந்து கொள்ள வேண்டிய தத்துவத்தை

மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்கள். கியாம நாள் எப்போது வரும் என்பதைத் தீர்மானிப்பது இங்கு நோக்கமல்ல, மாறாக, எஞ்சியுள்ள நமது வாழ் நாட்களில் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை அறிவதற்காகவே நாம் கியாம நாள் மீது நம்பிக்கை கொள்வதும், அதனைப் பற்றி அறிவதும் அவசியமாகும் என்று விளக்கியுள்ளார்கள். காரணம், நமது ஒவ்வொரு சொல், செயலுக்காக அல்லாஹ்விடம் நாம் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். அனைத்தையும் அறியும் அல்லாஹ்வுக்கு நமது எந்த வார்த்தையும், நடையும் மறைந்ததல்ல.

எனவே தான், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் கியாம நாளின் மீது நம்பிக்கை கொள்வதை நமது செயல்களுடன் தொடர்பு படுத்தி விளக்கமளித்துள்ளதைக் காண்கிறோம். ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள் ளார்கள்:

எவர் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாள் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளாரோ அவர் பேசினால் நல்லதைப் பேசட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும். எவர் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாள் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளாரோ அவர் தனது அண்டை வீட்டாருக்குத் தொல்லை கொடுக்காமலிருக்கட்டும். எவர் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாள் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளாரோ அவர் தனது விருந்தினரை உபசரிக்கட்டும். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

நாம் அல்லாஹ்வின் சந்நிதானத்தில் நிற்கும் போது நமது நிலை என்னவாக இருக்கும் என ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். நாம் மகிழ்ச்சியுடன் இருப்போமா? ஏக வல்லவனாகிய அல்லாஹ்வை நாம் சந்திக்கும் போது அவனைச் சந்திக்கின்ற ஆசை மிக்கவர்களாக இருப்போமா? நாம் உலகில் இருக்கும் போது அந்த அல்லாஹ்வை நம்பினோம். அவனது அழகிய திருநாமங்களால் அவனை நாம் அழைத்தோம். ஒரு இறை நம்பிக்கையாளர் - யாரை அவர் அதிகம் நேசிக்கின்றாரோ அவனைச் சந்திக்கின்ற போது நிச்சயம் அந்த இறை நம்பிக்கையாளர் அதிக மகிழ்ச்சியான நிலையிலேயே இருப்பார்.

அல்லாஹ்வின் சந்நிதானத்தில் நிற்கும் போது எவர்கள் தர்ம சங்கடமான நிலையை உணர்வார்களோ, பயம் பீதியுடன் காணப்படுவார்களோ அவர்களில் நின்றும் நாம் ஆகி விடக் கூடாது. தர்ம சங்கடமான நிலையை உணர்வதற்குக் காரணம், அவர்கள் அல்லாஹ் மற்றும் ரசூல்(ஸல்) அவர்களின் உரிமைகளை நிறைவேற்றவில்லை. தொழுகைகளை சரியாக நிறைவேற்றவில்லை. திருக்குர்ஆன் மற்றும் ”சுன்னாஹ்” வின் சட்டதிட்டங்களைப் புறக்கணித்தார்கள். அல்லது அவற்றைச் சாதாரண விஷயங்களாகக் கருதினார்கள். சிலர், தனது குடும்பம், மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளைப் புறக்கணித்ததால் குழப்பமான மன நிலையுடன் காணப்படுவர்.

ஜமாஅத்தார்களே!

இன்றைய பிரசங்கத்தின் சுருக்கமாக, மறுமைத் தீர்ப்பு நாளுக்காக நம்மை நாம் தயார் படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நோக்கில் சில பாடங்களை நாம் கற்றுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

**முதன்முதலாக**, அல்லாஹ்வின் மீது எப்போதும் ”தக்வா” (பயபக்தி) உடையவர்களாக நம்மை ஆக்கிக் கொள்வதற்கு, கியாம நாள் வருவது முற்றிலும் உண்மை என உளப்பூர்வமாக நாம் ஏற்க வேண்டும். கியாம நாள் தான் நமது திட்டமான இலக்காகும். நாம் நமது இறுதி இலக்கை அறியும் போது தான், அந்த இலக்கை அடைவதற்கான நமது பயணத்தைத் திட்டமிட்டு அமைக்கும் ஆற்றலைப் பெறுவோம்.

**இரண்டாவதாக**, அல்லாஹ்வின் உரிமைகளையும் மற்றவர்களின் உரிமைகளையும் நிறைவேற்றியுள்ளதை நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**மூன்றாவதாக**, நமது நற்காரியங்களை அதிகரித்துக் கொள்வதன் மூலம் நம்மை நாம் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் நிறைவேற்றும் நற்காரியங்களும் வணக்க வழிபாட்டுச் செயல்களும் அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்படும் எனும் உளப்பூர்வமான எண்ணத்துடன், ஆதரவுடன் அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

இம்மையிலும், மறுமையிலும் அல்லாஹ்விடத்தில் நன்மைகளைச் சம்பாதிப்பதற்கான நமது முயற்சிகளில் நாம் தொடர்ந்து ஈடுபடுவதற்கு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு எப்போதும் அருள் புரிவானாக! வழிகாட்டுவானாக! அன்பியாக்கள், சித்தீகீன்கள், ஷுஹதாக்கள் மற்றும்

ஸாலிஹீன்கள் போன்ற அல்லாஹ்வின் பிரியத்திற்குரிய அடியார்களில் நின்றும் நம்மை அல்லாஹ் ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.